# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1953/24 - 2016 පෙබරවාරි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.02.11

*1953/24 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (5) ஆம் பந்தியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சருக்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கடமைகள் மற்றும் பணிகள், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் என்பன 2016, பெப்புருவரி 15 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் ஒப்படைக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மலிக் சமரவிக்கிரம,
அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்.

கொழும்பு,
2016, பெப்புருவரி 01.

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. முதலீட்டுச் சபை, பொருளாதார/ கைத்தொழில் வலயங்கள் தொடர்பான செயலாற்றுகை, விவகாரங்கள் மற்றும் ஆற்றல்களை மீளாய்வு செய்தலும் மேற் பார்வை செய்தலும் | 1. இலங்கை முதலீட்டுச் சபை | * 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக் குழுச் சட்டம் (முதலீட்டுச் சபைச் சட்டம்) |
| 2. முதலீட்டாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் அத்துடன் நிரல் II இல் பட்டியலிடப்பட்டுள்ள நேரடி நிறுவனங்களின் பிரச்சினைகள், சிக்கல்கள் மற்றும் முரண்பாடுகள் என்பவற்றினை மீளாய்வு செய்தலும் அவற்றை நிவர்த்தி செய்தலும் | 2. இலங்கை ஏற்றுமதி அபிவிருத் திச் சபை | * 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் |

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 3. ஏற்றுமதித் துறையின் செயலாற்றுகை மற்றும் ஏற்றுமதியாளர்கள் அத்துடன் நிரல் II இல் பட்டியலிடப்பட்டுள்ள நேரடி நிறுவனங்களின் பிரச்சினைகளை மீளாய்வு செய்தல் | | |
| 4. நிரல் II இல் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் முகவர் நிறுவனங்கள் என்பவற்றின் முன்னேற்ற மீளாய்வு | | |
| 5. கைத்தொழில் பேட்டைகள் உள்ளடங்கலாக தொழிற் சங்கங்கள், தொழிற்சங்கவாதிகளுடன் தொடர்பான நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் | | |

2- 748

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.